**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 52/2023**
**வழக்கு சாட்சி. ம.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | சரவணக்குமார் | **ஜாதி:** | |
| **தந்தை பெயர்:** | சொக்கலிங்கம் | **தொழில்:** | விவசாயம் |
| **கிராமம்:** | குருந்திராக்கோட்டை | **சமயம்:** | |
| **தாலுக்கா:** | அறந்தாங்கி | **வயது :** | 55/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of oaths Act, 1969 (Act 44 of 1969)**

23.07.2025

**எதிரி ஆஜரில்லை.**

**புகார்தாரர் மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டு (Crl.M.P.1446/2025) மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

ஏற்கனவே புகார்தாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. தற்சமயம் புகார்தாரர் வழக்கு காசோலையை அறந்தாங்கி இந்தியன் வங்கியில் தாக்கல் செய்ததற்கான **05.04.2022 ஆம் தேதியிட்ட சலான் ம.சா.ஆ.4** குறியீடு செய்யப்படுகிறது. 25.04.2022 ஆம் தேதியிட்ட வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டதற்கான அஞ்சலக கவர் **ம.சா.ஆ.5** குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

எனது மனைவி மாரியம்மாள் இந்த எதிரி தமிழரசியும் நுண்கடன் நிதியுதவி சுய உதவிக்குழுவில் ஒன்றாக பணிபுரிந்து வந்தார்கள் என்றால், சரிதான். மேற்படி நிறுவனத்தில் எனது மனைவி மற்றும் எதிரி ஆகியோர் 10 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறார்கள். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனது மாத வருமானம் ரூ.5000/– ஆகும். எதிரி எந்த ஊர் என்றால், எதிரி எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. எதிரி எங்கே வைத்து, எந்த தேதியில் கடன் கேட்டார் என்றால், எனது வீட்டில் வைத்து 25.08.2021 ஆம் தேதியில் பணம் கேட்டார். நான் வட்டி கொடுப்பது வழக்கம் என்றால், இல்லை. குடும்ப பழக்க வழக்கத்திற்காக பணம் கொடுப்பேன். வழக்கு காசோலைத் தொகை ரூபாய் இரண்டு இலட்சத்தை கையிருப்பில் வைத்து எதிரிக்கு கொடுத்தேன். எதிரி 25.08.2021 ஆம் தேதி பணம் கேட்டு அன்றே கொடுத்துவிட்டேனா என்றால், ஆமாம்.

2) எனது பிரமாண வாக்குமூலத்தில் 10.01.2022 ஆம் தேதி ரூபாய் ஐம்பதாயிரத்தை எதிரி புகார்தாரரிடம் கொடுத்தாக கூறியுள்ளேன் என்றால், சரிதான். மேற்படி பணத்தை கொடுத்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். இரண்டு இலட்சம் பணம் கொடுத்ததாக கூறப்படும் வேலையில் யாரேல்லாம் வீட்டில் இருந்தார்கள் என்றால், நானும் எனது மனைவியும் இருந்தோம். எனக்கும் எதிரிக்கும் வரவு செலவு குறித்து ஏதேனும் நோட்டு

பராமரிக்கப்படுகிறதா என்றால், இல்லை. எனக்கு எதிரிக்கும் எவ்வித வரவு செலவும் இல்லை அதனால்தான் வரவு செலவு நோட்டினை பராமரிக்கவில்லை என்றால், சரியல்ல. 25.08.2021 ஆம் தேதி எதிரியிடம் பணம் கொடுத்ததற்கு அவரிடமிருந்து ஏதேனும் பொறுப்புக்காக பெற்றுக்கொண்டேனா என்றால், எதுவும் வாங்கவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கு வழக்கு காசோலையை கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான்.

3) எதிரி கொடுத்த காசோலை எண்.000102 ஆகும். மேற்படி வழக்கு காசோலையினை பணமாக்குவதற்கு யார் வங்கியில் காசோலையினை தாக்கல் செய்தார்கள் என்றால், நான்தான் தாக்கல் செய்தேன். அ.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பம் வேறு மையில் உள்ளது என்றால், சரிதான். ஆனால் அவர்தான் போட்டுக்கொடுத்தார். அ.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பத்திற்கும் அதில் உள்ள மற்ற எழுத்துக்கள் பூர்த்தி செய்ததற்கும் வித்தியாசம் உள்ளது என்றால், சரிதான். அ.சா.ஆ.4 வழக்கு காசோலையை வங்கியில் தாக்கல் செய்ததற்கான சலானில் உள்ள கையெழுத்துக்களும் அ.சா.ஆ.1 காசோலையை பூர்த்தி செய்ததற்கான எழுத்துக்களும் ஒன்றாக உள்ளது என்றால், சரிதான். அ.சா.ஆ.4 சலானை நான்தான் பூர்த்தி செய்தேன்.

4) எனது மனைவி மேற்படி சுய உதவிக்குழுவில் பணம் வசூல் செய்து வைப்பீடு செய்வார் என்றால், சரிதான். வசூல் செய்த பணத்தை வங்கியில் வைப்பீடு செய்வார் என்றால், இல்லை. அதே நாளில் வைப்பீடு செய்வார். பொதுவாக வைப்பீடு செய்த பணத்திற்கு பணத்திற்கு பதிலாக காசோலையும் தருவார்கள் என்றால், இல்லை. பணத்தைதான் செலுத்துவார். இவ்வழக்கிற்கு முன்பு எதிரியும், நாங்களும் குடும்ப நண்பர்கள் என்றால், சரிதான். நட்பு ரீதியாக நாங்கள் அவர்கள் வீட்டிற்கு செல்வதும், எதிரி எங்கள் வீட்டிற்க்கு வருவதும் வழக்கம் என்றால், எதிரிதான் எங்கள் வீட்டிற்கு அதிகமாக வருவார். பொதுவாக வங்கியில் வேலை பார்ப்பவர்கள் கையில் எப்போதும் காசோலை புத்தகம், வங்கிகணக்கு புத்தகம் வைத்திருப்பார்கள் என்றால், இல்லை.

5) எதிரி வழக்கு காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்ய சொல்லிய தேதி என்னவென்றால், 04.04.2022. நான் வசூலுக்கு தாக்கல் செய்த தேதி 05.04.2022. நான் வசூலுக்கு ஒருநாள் காலதாமதமாக தாக்கல் செய்ததை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். ஒரு நாள் ஏன் கால தாமதமாக வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்ற விபரத்தை எனது நீரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான். வசூலுக்கு தாக்கல் செய்த காசோலை போதிய பணமில்லை என்று 12.04.2022 ஆம் தேதி திருப்பப்பட்டது. பின்னர் நான் வழக்கறிஞர் மூலம் 22.04.2022 ஆம் தேதி அறிவிப்பு அனுப்பினேன். 12.04.2022 ஆம் தேதி முதல் 22.04.2022 ஆம் தேதி வரை இடைப்பட்ட காலத்தில் காசோலை மறுக்கப்பட்ட விபரத்தை எதிரியிடம் தெரிவிக்கவில்லை என்றால், சரியல்ல. நான் அழைத்து தெரிவித்தேன். நான் அவரது வீட்டிற்கு சென்று நேரில் தெரிவித்தேன். மேற்படி விபரங்களை எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையானது ஒத்திவைக்கப்படுகிறது.